செய்தி வெளியீட்டு எண்–233 நாள்–21.03.2008

## தமிழக மழை நிலவரம் குறித்து அரசு செய்தி குறிப்பு

தமிழகத்தில் கடந்த பத்து நாட்களாக, தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் பிற மாவட்டங்களில் கன மழை முதல் மிக கன மழை பெய்து வருகிறது. கடந்த இரண்டு நாட்களில், தமிழகத்தில் மிக அதிக அளவு மழை பெய்துள்ளது. 19–3–2008 அன்று, மாநிலம் முழுவதும் பெய்த சராசரி மழை அளவு 15.32 மி.மீ. 20–3–2008 அன்று, மாநிலத்தில் பெய்த சராசரி மழை அளவு 35.65 மி.மீ. 19–3–2008 அன்று விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் 120 மி.மீ மழையும், இராஜபாளையத்தில் 112.40 மி.மீ மழையும், வத்திராயிருப்பில் 110.00 மி.மீ. மழையும், திருநெல்வேலி மாவட்டம், இராதபுரத்தில் 100 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தமிழக அரசு மாவட்ட நிர்வாகத்தை முடுக்கி விட்டு, தேவையான பாதுகாப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

20–3–2008 அன்று இராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலத்தில் 210.00 மி.மீ. மழையும், நீலகிரி மாவட்டம் கேத்தியில் 192.00 மி.மீ மழையும், திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரத்தில் 185.00 மி.மீ. மழையும், திருநெல்வேலி மாவட்டம் சிவகிரியில் 150.44 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. மேற்கண்ட இடங்கள் உட்பட, மாநிலத்தில் 20–3–2008 அன்று 19 இடங்களில் 100 மி.மீ. மற்றும் அதற்கும் அதிகமாக மழை பெய்துள்ளது.

மாநிலத்தில், பரவலாக பெய்து வரும் இத்தொடர் மழையின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் இரண்டு நபர்கள் மற்றும் புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா ஒருவர் உட்பட

ஏழு நபர்கள் (4 ஆண்கள் மற்றும் 3 பெண்கள்) பலியாகி உள்ளனர். மாநிலத்தில் 52 கால்நடைகள் உயிரிழந்து உள்ளன. 156 குடிசைகள் (111 முழுவதும் மற்றும் 45 பகுதி) சேதமடைந்து உள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி பேரூராட்சியில் உள்ள அண்ணாநகர் குடியிருப்பைச் சார்ந்த 300 குடும்பங்கள் பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். இம்மாவட்டத்தில் உள்ள ஆர்.எஸ்.மங்கலம் சனவேலி பாலத்தில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் 2816 ஹெக்டேர் பரப்பளவிலும் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் 296 ஹெக்டேர் பரப்பளவிலும் நெற்பயிரை மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், தங்கள் மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக, பயிர்களுக்கும், சாலை மற்றும் பாலங்கள், ஆறு, குளங்கள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள சேதத்தை மதிப்பிட்டு அரசிற்கு உடனடியாக அறிக்கை அனுப்ப சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் அறிவுரைகள் வழங்கப்பட்டு உள்ளன. மாநிலத்தில் தொடர் மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்பை கூர்ந்து அரசு அவ்வப்போது ஆய்வு செய்து தேவையான பாதுகாப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.